நாள்.13.08.2025.
அசல் வழக்கு எண்.66/2021
வா. சா.1
பெயர். தங்கபெருமாள்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி பெயர் கோபால் என்றால் சரியல்ல, கோபால கிருஷ்ணன் தான்,அவரை கோபால் என்று அழைப்பார்கள். கோபால கிருஷ்ணன் என்ற பெயரை ஆவண ரீதியாக நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி இளவர் ஆண்றனி பாலசிங் என்பது ஆண்டன் பாலசிங் என்று அழைப்பார். என்ன பரிகாரம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி வீடு கட்டி உள்ளார், அவர் கட்டி உள்ள சுவர் என்னுடைய சொந்த இடத்தில் உள்ளது, மேலும் பாதை இருப்பதாக தாவா செய்கிறார்.

பிரதிவாதி வீடு பிராது தபசில் சொத்திற்கு எந்த பகுதியில் உள்ளது என்றால் மேற்கு பகுதியில் உள்ளது. பிரதிவாதி எத்தனை சதுர அடி சுவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டி உள்ளார் என்றால் தோராயமாக கிழமேல் 3 அடியும் தென்வடல் 100அடி இருக்கும். மேற்படி ஆக்கிரமிப்பு என்பது பிராது தபசில் சொத்திற்குள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு மேற்படி சுவர் கட்டபட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதங்கள் முதல் 1 வருடங்களுக்குள் இருக்கும்.

தபசில் சொத்திற்கு கிழக்கு யார் சொத்து உள்ளது என்றால் என் மனைவி பாக்கியலெட்சுமி பாத்தியபட்டு இருந்தது, அதை என் மகன் சந்திரகாசனுக்கு என் மனைவி ஏற்பாடு எழுதி கொடுத்துவிட்டார். என் மனைவி என் மகனுக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் சொத்தின் சர்வே எண்.999/6A13 இருக்கலாம், சரியாக தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று தெரியுமா என்றால் 999/6A12 ஆகும். வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் காசிநாடார் என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

காசி நாடார் சொத்தை எழுதி கொடுக்கவில்லை என்றாலும், நான் ஆள்மாறாட்டம் செய்து ஆவணம் தயார் செய்து வா.சா.ஆ.1யை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 அசல் ஆவணத்தை பார்த்ததால் தான் காசி நாடார் உண்மையாக ஆவணத்தை எழுதி கொடுத்தாரா என்ற விவரம் நீதிமன்றம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல, உண்மையில் எழுதி கொடுத்தார். காசி நாடார் தற்போது எங்கு உள்ளார் என்றால் அவர் இறந்துவிட்டார். அவருடைய மகன்கள் தற்போது பரப்பாடி பக்கம் பாரதிநகரில் வாழ்ந்து வருகிறார்கள்.

என்னிடம் காட்டபடும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் காசி நாடார் தனக்கு 07.11.1982ல் வள்ளியூர் சார்பதிவாளர் சரகம் 1வது புத்தகம் 139 வாலியூம் 381 முதல் 383 வரை பக்கங்களில் 1983 வருடத்திய 1204 நம்பர் மூலம் சொத்தை அவர் கிரையம் பெற்று அனுபவத்து வந்ததாகவும், வா.சா.ஆ.1ல் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் தாய் பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் காசி

நாடார் என்னிடம் தரவில்லை. நான் கூட்டுறவு வங்கியில் ஆவணத்தை வைத்தாக பிராதில் கூறி உள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல.

எந்த தேதியில் எந்த கூட்டுறவு வங்கி கிளையில் ஆவணத்தை வைப்பீடு செய்துள்ளேன் என்று குறிப்பிட்டு என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் தளபதி சமுத்திரத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் வைத்துள்ளேன். தாவா சொத்திற்கு தெற்கு யாருடைய சொத்து உள்ளது என்றால் எனது மனைவி பாக்கியலெட்சுமியின் தாயார் செல்லம்மாள் பெயரில் உள்ளது. அந்த நீதிமன்றத்தில் தான் உள்ளது. அந்த சொத்திற்கு எனது மனைவி பாக்கிலெட்சுமி பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. மேற்படி பட்டா மாறுதலுக்கு முன்பு செல்லம்மாள் எனது மனைவி பாக்கியலெட்சுமிக்கு ஆவணம் எதுவும் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை.

என் மனைவி பெயருக்கு ஆவணம் எதுவும் இல்லாமல் தாவா சொத்திற்கு வருவாய்துறையில் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வாரிசு சான்றிதழ் கொடுத்து தான் மாற்றம் செய்தேன். காசிநாடாரின் தாய் பத்திரத்தை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி தாய் பத்திரத்தை பார்த்து தான் வா.சா.ஆ.1 எழுதபட்டது. ஆனால் அதன் ஒளி நகலை பார்த்தேன். என்னிடம் காட்டபடும் தாய் பத்திரமான ஆவண பதிவு எண்.1204/1983 ன் ஆவணம் இது தான். என்னுடைய கிரையதாரர் காசி நாடார் தகப்பனார் பெயர் சுப்பையா நாடார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவண பதிவு எண்.1204/1983 **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யபடுகிறது.

நான் வேண்டுமென்றே என்னுடைய தாய் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், எனக்கு கிரையம் கொடுத்த காசி நாடாருக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லபட்டவாறு 9 சென்ட் பரப்பு சொத்து உரிமை இல்லை என்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் நான் முந்தைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 9 சென்டிற்கு விஸ்தீரணம் எழுதபட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் தாய்பத்திரமான பி.சா.ஆ.1 ல் 7 சென்ட் தான் பரப்பு சொத்து உரிமை உள்ளதாக சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு தவிர வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளதா என்றால் குடும்ப சொத்தை பொறுத்து வழக்கு உள்ளது. நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்தில் மேற்கு பக்கம் 1 சென்ட் அளவில் பாதை உள்ளதாக பி.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவ்வாறாக பாதை எதுவும் இல்லை. என் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா என் பெயரில் மாற்றம் செய்ய வா.சா.ஆ.1 மட்டும் வருவாய் துறை அலுவலரிடம் பரிசீலனைக்கு கொடுத்தேன் என்றால் சரிதான்.

பி.சா.ஆ.1 ஆவணத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் பி.சா.ஆ.1 ஆவணத்திற்கு நகல் எடுத்தார்கள். பி.சா.ஆ.1 நகலை நான் வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எடுத்தேன், அதனை வருவாய்துறை அதிகாரியிடம் கொடுக்கவில்லை, வா.சா.ஆ.1 மட்டும் கொடுத்தேன். வருவாய்துறை அதிகாரிகள்

பி.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்து இருந்தால் தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா வழங்கி இருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. எனது பிராதில் தபசில் விவரத்தில் எல்கை விவரம் வேண்டுமென்றே மறைக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.3 வீட்டு வரி ரசீதுகள், வா.சா.ஆ.4 மின்கட்டண ரசீதுகள், வா.சா.ஆ.5 புகைபட சீடி, வா.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழ், வா.சா.ஆ.7 வரி ரசீதுகள் ஆகியவைகள் சொத்தின் நீள அகலம் பொறுத்து தீர்மானிக்க இயலாது என்றால் சரியல்ல. வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். வரைபடமும், பட்டாவும் நான் சொன்னதன் அடிப்படையில் எழுதபட்டது என்றும், என்னுடைய கிரையதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் அளவு கொண்டு எழுதபட்டதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாவா என்பது அளவுகளை பொறுத்தது என்றால் சரிதான். எனது பிராதில் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் கூறபடாததால் இந்த வழக்கு பிராது தாக்கல் செய்த விதத்தில் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.2 ஆவணம் என்பது பிராது தபசில் சொத்திற்கு தெற்கு உள்ள சொத்திற்கு உள்ள ஆவணம் என்றால் சரிதான். எதற்காக மேற்படி ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் என்னுடைய சொத்து மேற்படி ஆவணத்தில் வடக்கு எல்கையாக காண்பிக்கபட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் தபசில் விவரத்தில் வடக்கு எல்கையாக இசக்கிமுத்து நாடார் என குறிப்பிடபட்டுள்ளது என்றால் அந்த சமயம் காசி நாடார் அந்த சொத்தை வாங்கவில்லை. அதற்கு பிறகு தான் வாங்கினார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொல்லபட்டுள்ள இசக்கிமுத்து நாடாரிடம் இருந்து என் முன்சுவான்தாரர்களுக்கு எப்படி கிடைத்து என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தும் வெவ்வேறு இடத்தில் உள்ள சொத்துகள் என அனுமானிக்கபடுகிறது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.2 ஆவணம் கருத்தில் கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய கிரையதாரருக்கு 7 சென்ட் பாத்தியம் இருக்கும் நிலையில் வா.சா.ஆ.1 மூலம் 9 சென்ட் கிரையம் கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் இந்த வழக்கு தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல.

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2025.08.12 17:08:11 +0530